தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1981 மார்ச் 30.

பங்குனி 17, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்".

செய்ய வேண்டியன இவைதான் என்பதை நூல் அறிவாலும் நுண்ணறிவாலும் நன்கு தெரிந்துக் கொண்டபோதும் அந்த இடத்தின் நிலைமையையும் காலத்தின் சூழலையும் அறிந்து அவைகளுக்கு ஏற்ற வகையில் செயல்படுதல் வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடம் இருந்து பெற்ற உதவி.

* வினா எண் 544—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் மின் சக்தியை பரவலாக்க கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடம் நிதி உதவி இதுவரை எவ்வளவு பெற்றது ?

(ஆ) மானியம், கடன் விவரம், மாநில அரசு பங்கு எவ்வளவு ?

(இ) இத்திட்டம் செயல்படும் முறை எங்கு எங்கு ஆரம்பிக்கப்பட்டு விஸ்தரிக்க திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) 1980-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இறுதிவரை ரூபாய் 3,661.840 இலட்சம் ஆகும்.

(ஆ) கிராமப்புற மின் வசதிக் கழகம் முழுவதும் கடனாகவே வழங்குகிறது. மானியம் ஏதும் அளிப்பதில்லை. இந் திருவனத் திட்டங்களை நிறைவேற்ற மின் வாரியத்திற்கு தனியே மாநில அரசு, மானியமோ கடனோ அளிப்பதில்லை.

(இ) கிராமப்புற மின் வசதிக் கழகத்தின் திட்டம் 1970–71-ஆம் ஆண்டு முதலாவதாக மதுரை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நீலகிரி மாவட்டம் நீங்கலாக மாநிலம் முழுவதுமாக விரிவாக்கப்பட்டது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே 36 கோடி ரூபாய்க்கும் அதிகமாகப் பணம் பெற்றும் இன்றைய தினம் வரையிலே கிராமங்களிலே தெரு விளக்குகள் எரியாமல் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். தெரு விளக்குகள் எரியச் செய்கின்ற நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

மின்வாரியத் தொழிலாளர்களின் பிராவிடண்ட் நிதிக் கணக்குகள்.

* வினா எண் 545—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் வாரியத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் நிதி கணக்குகளும், பாஸ் புத்தகமும், எத்தனை ஆண்டுகளுக்கானது கொடுக்கப்படாமலிருக்கிறது ?

(ஆ) அவற்றைக் கொடுக்க முடியாமல் நின்று போனதற்கான காரணமென்ன ?

மாண்புமிகு திரு. ச. இரமச்சந்திரன் :

(அ) மின் வாரியத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பிராவிடெண்ட் நிதி கணக்குகளும், பாஸ் புத்தகங்களும் இதுவரை கொடுக்கப்படவில்லை.

(ஆ) நிதி கணக்குப் பராமரிப்புப் பணியினை கணக்கு இயல் பிரிவிலிருந்து திட்டங்கள் மற்றும் வட்டங்களுக்குப் பரவலாக்கப்பட்டதின் (Decentralisation) விளைவாக சில செயல்முறை இடையூறுகள் ஏற்பட்டதால் இது முடியவில்லை. இப்பணியினை உடனே முடிக்கும்படி சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் மின் வாரியத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.